# தமிழ் அறிவுப் போட்டி 2023

# ஆண்டு 7

# மாதிரி வினாக்கள்

Quiz Sample Questions 2023 - Year 7

1. மான் ஓடியது.

இதே போல இறந்தகாலத்தில்

மான்கள் ……………………

விடை:

ஓடின

**2 . "கண்" என்பதற்கு ஒரு ஒத்த கருத்துள்ள சொல் தருக.**

**விடை:**

**விழி**

3. "சொல்" என்பதன் பன்மை எது?

(அ) சொல்கள்

(ஆ) சொல்லுகள்

(இ) சொற்கள்

விடை:

(இ) சொற்கள்;

4. பின்வரும் வசனத்தின் பயனிலை எது?

‘தந்தை தாய் பேண்’

விடை:

**பேண்**

5. ”நன்மை” என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல் ”தீமை”
அது போல

”உயர்வு” என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல் என்ன?

# விடை:

***தாழ்வு***

6. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”

இது எந்த நூலில் வருகிறது?

**விடை:**

# கொன்றை வேந்தன்

7. ஆட்டின் இளமைப் பெயர் குட்டி.

‘ஆடு – ஆட்டுக் குட்டி’

இதே போல

மாட்டின்; இளமைப் பெயர் என்ன?

விடை:

கன்று

8. சோழ மன்னர்களின் கொடியில் காணப்பட்ட சின்னம் (விலங்கு) எது?

**விடை:**

# புலி

**9. " ப் + ஒ "**

**ஆகிய இரு எழுத்துக்களும் சேரும் போது உருவாகும் எழுத்து எது?**

# விடை:

# பொ

(சரியாக உச்சரிக்க வேண்டும்)

10. உங்கள் அம்மாவின் தங்கை உங்களுக்கு என்ன உறவு முறை?

**விடை:**

# சித்தி

11. தலைமுறை தலைமுறையாக நமது

முன்னோர்கள் வாழ்ந்த இடத்தை எப்படி

அழைப்போம்?

**விடை:**

# பூர்வீகப் பிரதேசம்

# (தாயகம், புலம்)

# 12. பின்வரும் இலக்கத்தை தமிழில் கூறவும்.

**483**

## விடை:

# நானூற்று எண்பத்து மூன்று

**13. "தம்பி" என்ற சொல்லுக்கு பெண்பால் "தங்கை" அது போல**

**"ஆசிரியன்" என்ற சொல்லுக்கு பெண்பால் என்ன?**

# விடை:

***ஆசிரியை***

**14. ”நெருப்பு” என்ற சொல்லுக்கு ஒரு ஒத்த சொல் தருக.**

# விடை:

***தீ, அக்கினி,***

**15. ”நான் காலையில் எழுந்தேன்” என்ற வசனத்தில் எழுவாய் எது?**

# விடை:

***நான்***